Registered as News Paper | பக்கங்கள் 04 | விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM | PEOPLES DAILY | மக்கள் தினசரி

நாதம்: 02 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | ஐப்பசி 12 | (29 10 1991) | செவ்வாய்க்கிழமை | ஓசை: 253

## அஞ்சல் அடையாள அட்டை வழங்குவதில் அலட்சியம்

வடபகுதிக்கான அஞ்சல் அடையாள அட்டைகளை வழங்குவதில் தபாற்திணைக்களம் தொடர்ந்தும் அலட்சியமாக இருந்துவருகின்றது. வடபகுதியிலிருந்து மேற்படி அடையாள அட்டைகளைப் பெறுவதற்காக ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் செய்யப்பட்டபோதிலும் அவற்றுக்கு இதுவரை அடையாள அட்டைகள் வழங்கப்படவில்லை. குறிப்பாக பாடசாலை மாணவர்கள் மேற்படி அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொண்டாலே க. பொ. த. பரீட்சைக்குத் தோற்றமுடியும் என்பதால் மாணவர்களே அதிகளவில் இந்த அட்டைக்கு விண்ணப்பித்துள்ளனர். இவ் விண்ணப்பங்கள் தமிழ்மொழிமூலம் பூரணப் (4 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் புலிகளின் தாக்குதல் அதிகரிப்பு; இராணுவ தரப்பில் பலத்த இழப்புக்கள்

## பாதுகாப்பு வட்டாரங்களில் குழப்பம்

(மட்டக்களப்பு)

தென் தமிழீழத்தில் விடுதலைப் புலிகள் தமது தாக்குதல் நடவடிக்கையைத் தீவிரமாக்கியுள்ளனர். கடந்த முப்பது நாள்களில் மட்டும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களில் சுமார் ஐம்பதிற்கு மேற்பட்ட சிறிலங்கா ஆயுதப்படையினர் கொல்லப்பட்டனர். பெருமளவில் காயமடைந்தனர். பெருமளவு ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

தீவிரமடைந்துள்ள புலிகளின் இத் தாக்குதல் நடவடிக்கைகள் வடக்கில் தற்பொழுது தனது முழுக்கவனத்தையும் செலுத்தி வரும் இராணுவத்தினருக்குப் பெரும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிழக்கில் புலிகள் தமது தாக்குதல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த சில மாதங்களாக தென் தமிழீழப் பகுதியில் தணிந்திருந்த தாக்குதல் நடவடிக்கைகள் கடந்த மாதத்தில் இருந்து அதிகரித்துள்ளதாகத் தெரிகின்றது.

கடந்த மாதம் சித்தாண்டிப் பொலிஸ் நிலையம் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது. வாகரையில் சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண் ஒன்று கைப்பற்றப்பட்டது. பன்னிரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். கடந்த மாதம் 31 ஆம் திகதி மண்டூரில் பதினொரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பவல் கவசவாகனம் சேதமடைந்தது. இதே வேளை ஆங்காங்கு சிறுதாக்குதல் சம்பவங்களும் அதிகரித்தன.

கடந்த மாதம் இவ்வாறு அதிகரித்து வந்த தாக்குதல்கள் இம் மாதத்தில் மேலும் அதிகரித்தன. வெலிக்கந்த, திருகோணமடு, சல்லிப்பிட்டி, இரண்டாம் கொலனி, பாலம் போட்டாறு ஆகிய இடங்களில் இம்மாதத்தில் தாக்கு

## ஏழுபுலிகள் ஆதரவாளர்கள் இராமேஸ்வரத்தில் கைது

(சென்னை)

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் எனக் கருதப்படும் ஏழு பேரைக் கடந்த வாரம் தமிழகப் பொலிசார் இராமேஸ்வரத்தில் கைது செய்து இருந்தனர்.

அவர்களை அடுத்தமாதம் 19 ஆம் திகதிவரை பொலிஸ் காவலில் வைக்கும்படி ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள நீதிபதி என்.எம். சித்திக் உத்தரவிட்டுள்ளார்.

இதேநேரம் சிவராஜனின் சாரதி எனக் குற்றஞ்சாட்டப்பட்ட ரங்கனும், சிவராஜனுக்குப் பெங்களூரில் வீடு வாடகைக்குக் கொடுத்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட ரங்கநாத் ஆகியோரை அடுத்த மாதம் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.

## யாழ்ப்பாணத் தாக்குதல் நிச்சயிக்கப்படவில்லையாம்

யாழ் குடாநாட்டின் கரையோரப் பகுதிகளை சுற்றி வளைத்துள்ள சிறிலங்கா ... மும் நிச்சயிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் விடுதலைப் புலி

## இராணுவம் சுட்டு பொதுமகன் காயம்

(மட்டக்களப்பு)

அம்பிலாந்துறைக்கு ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் வீதிகளில் பொது மக்கள் மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் பொதுமகன் ஒருவர் படுகாயமடைந்தார்.

மேற்படி சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது நேற்று முன்தினம் காலை பெரிய போரதீவு இராணுவத்தினர் அம்பிலாந்துறைக்கு ரோந்து சென்றனர். இவர்கள் ரோந்து செல்லும்போது வீதியின் இருமருங்கிலும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவண்ணம் சென்றுள்ளனர். கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த ஆண்டி சண்முகராசா என்பவரே இதன்போது படு

## ... நவீன ஆயுதங்கள்

யாழ் குடாநாட்டின் கரையோரப் பகுதிகளை சுற்றி வளைத்துள்ள சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் யாழ் குடாநாட்டை நோக்கி முன்னேறும் தமது அடுத்த கட்ட நடவடிக்கை எப்போது தொடங்குவார்கள் என்பது இன்னமும் நிச்சயிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் விடுதலைப் புலிகளின் அடுத்த நடவடிக்கையை பொறுத்தே முற்றுகை இடம் பெறும் என்றும் கொழும்புப் பத்திரிகை ஒன்று கருத்துத் தெரிவித்துள்ளது.

## எங்கிருந்தாலும் தண்டனை

### - நரசிம்மராவ்

"இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை கொன்றவர்களை எங்கிருந்தாலும் அவர்களைத் தேடிப் பிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவோம்" என்று இந்தியப்பிரதமர் பி.வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் சென்னைக்கு சென்றிருந்த பி.வி. நரசிம்மராவ் சிறிபெரும்புதூரில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே மத்திய அர

(4 ஆம் பக்கம் பார்க்க)

புலிகளுக்கு எதிரான நடவடிக்கைக்கு

## தமிழ், முஸ். ராணுவ பிரிவு அமைக்க வேண்டுகோள்

### - சுந்தரமூர்த்தி அபூபக்கர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை அடக்கி ஒடுக்கும் பணியில் ஈடுபட தமிழர், முஸ்லிம் ராணுவப் பிரிவுகளை அமைக்க பாராளுமன்ற உறுப்பினரான சுந்தரமூர்த்தி அபூபக்கர் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

முஸ்லிம்களுக்கு 'பக்தி' என்ற தனியான ராணுவப் பிரிவையும், தமிழர்களுக்கு 'வலம்புரி' என்ற ராணுவப் பிரிவையும் அமைக்குமாறு வன்னி மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் சுந்தரமூர்த்தி அபூபக்கர் கடந்த வியாழன் அன்று பாராளுமன்றத்தில் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

## வெலிகந்தையில் நவீன ஆயுதங்கள் பலவற்றைப் புலிகள் கைப்பற்றினர்

(வெலிகந்தை)

வெலிகந்தைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மோதலில் பெருந்தொகையான நவீனரக ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன

கல்லிச்சை வடமுனை முகாமில் இருந்து வெலிகந்தை முகாமுக்கு ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் பதின்நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், ஏழு பேர் படுகாயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டது தெரிந்ததே.

மேற்படி அதிரடித் தாக்குதலின்போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு;

★ ஏ.கே.எல்.எம்.ஜி - 02
இதன் மகசீன் - 02
★ ரி56-2ரகதுப்பாக்கிகள் -04
★ ரி56-1ரகதுப்பாக்கிகள் -01
★ ரி-81 ரகதுப்பாக்கிகள் -07
இதன் மகசீன் - 28
★ ஏ.கே மகசீன் - 18

(4 ஆம் பக்கம் பார்க்க)

தென் தமிழீழக் களத்தில்

## வீரமரணமடைந்த முதலாவது பெண் போராளி 2வது லெப். நிலா

தென் தமிழீழத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் நடாத்திய அதிரடித் தாக்குதலில் 2ம் லெப்டினன்ட் நிலா(கிருஷ்ணபிள்ளை நிர்மலாதேவி குருமண் வெளி, மட்டக்களப்பு) வீரமரணமடைந்தார்.

மேற்படி மோதலில் பதின்நான்கு சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஏழுபேர் படுகாயமடைந்ததும் இவர்களிடமிருந்து பெருமளவு நவீனரக ஆயுதங்கள் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டதும் தெரிந்ததே.

தென் தமிழீழத்தில் இராணுவத்தினர் மீதான தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வீரமரணத்தைத் தழுவிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மூளாய், பொன்னாலைமீது எறிகணைத் தாக்குதல்

(பொன்னாலை)

காரைநகரிலிருந்து பொன்னாலை, மூளாய் ஆகிய பகுதிகளை நோக்கிச் சிறிலங்கா இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

நேற்றும், நேற்று முன்தினமும் மேற்படி பகுதிகளை நோக்கித் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டபோதிலும் சேதமெதுவும் ஏற்படவில்லை.

இரண்டாம் கொலனி, பாலம் போட்டாறு ஆகிய இடங்களில் இம்மாதத்தில் தாக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த ஆண்டி சண்முகராசா என்பவரே இதன்போது படுகாயமடைந்தவராவார்.

## கிளைமோரில் சிக்கிய இரு இராணுவம் படுகாயம்

(அன்னமலை)

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் கைவிட்ட முகாமைப் பார்வையிடச்சென்றபோது அங்கு வைக்கப்பட்டிருந்த கிளைமோர் வெடித்ததனால் இரு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

அன்னமலை என்னுமிடத்தில் அமைந்திருந்த தமது முகாமை கடந்த 26-ம் திகதி அகற்றிய சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் மீண்டும் அம்முகாமைப் பார்வையிட வந்தபோதே அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர் ஒன்று வெடித்ததாகவும் இதனால் இருஇராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் அங்கிருந்துவரும்செய்திகள் தெரிவிக்கின்றன

## மண்முனைதுறை நோக்கித் துப்பாக்கிச் சூடு

மண்முனைதுறைப் பகுதி நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ச்சியான

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 'யாகராகங்கள்' வெளியீடு

முல்லைத்தீவு மாவட்ட இசைக் கலைஞர்களின் ஆக்கமான 'யாகராகங்கள்' எழுச்சிகீதங்கள் ஒலிப்பதிவு நாடா முல்லை மாவட்ட கலைபண்பாட்டு அவையினரால் கடந்த வியாழன்மாலைமுள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி அரங்கில் இடம்பெற்ற விழாவில் வெளியிடப்பட்டது.

'யாகராகங்கள்' வன்னி மாவட்டத்தின் முதல் முயற்சியாகும்.

## 'சார்க்கில்' இந்தியாவின் பங்கேற்பு அத்தியாவசியமானது

### பிரேமா நரசிம்மராவிற்கு கடிதம்

'சார்க்' உச்சி மாநாட்டில் இந்தியாவின் முழுமையான பங்கேற்பு அத்தியாவசியமானது என்று இந்திய அரசாங்கத்தை சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கேட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே இதனை பிரேமதாசா வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெறவிருக்கும் 'சார்க்' அமைப்பின் ஆறாவது உச்சி மாநாட்டின் ஆரம்பம் முதல் முடிவு வரை நரசிம்மராவை பங்கேற்குமாறும், இந்த மாநாட்டில் இந்தியாவின் பங்கினையும் வற்புறுத்தி அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## பேசாலையில் கடற்படை மீது தாக்குதல்

பேசாலைக்கும்-தலைமன்னாருக்கும் இடையே ரோந்து சென்றுகொண்டிருந்த கடற்படைப் படகு ஒன்றின் மீது நேற்று விடுதலைப் புலிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு எதிரான நடவடிக்கை தீவிரம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் இருக்கும் தொப்பிகலகாட்டுப்பிரதேசத்தில் இருந்து புலிகளை வெளியேற்றும் நடவடிக்கைகளில் இராணுவம் ஈடுபட்டுள்ளதாக சிறிலங்கா இராணுவத்தளபதி ஹமில்டன்வணசிங்கா செய்தியாளர்களிடம் பேசுகையில் நேற்றுத் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் மேலதிக இராணுவப் பிரிவுகளும் அம்பாறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 35, 000 ஆசிரியர் புதிய நியமனம்

(கொழும்பு)

35,000 ஆசிரியர்கள் விரைவில் நியமிக்கப்படுவார்கள் என்று உயர்கல்வி ராஜாங்க அமைச்சர் ஏ. சி. எஸ் ஹமீட் தெரிவித்துள்ளார்.

## வரி விளம்பரம்

நீம் தூபம்

மழையுடன் நுளம்புத் தொல்லையும் தொடங்குகிறது. நீம் தூபம் புகைத்து நிம்மதியாக உறங்குங்கள். 'மின்னலவதி' யாழ்ப்பாணம்.

(B/3381)

### தேவை

யாழ் நகரிலுள்ள பிரபல நிறுவனத்தில் கடமையாற்ற ஆங்கில தட்டெழுத்து அனுபவமுள்ள பெண் லிகிதர் தேவை.

விள. இல. 119

மே/பா ஈழநாதம்

(B/3398)

## மரம் நடுகை


(நமது நிருபர்)

குடாநாடு முழுவதும் பெருந்தொகையான மரக்கன்றுகளை நடுவதற்குரிய நடவடிக்கைகளில் தமிழீழ ஆய்வு நிறுவனம் ஈடுபட்டுள்ளது. புளி, இலுப்பை, இப்பில், திருக்கொன்றை, இலவம், மரமுந்திரிகை, அகத்தி, பலா, ஆகிய பயன் தரு மரக்கன்றுகளை நடுவதற்கான ஏற்பாடுகள் செய்வதற்காக மில்க்வைற் தொழிலகம், அன்னை தொழிலகம் போன்ற பல நிறுவனங்களின் பங்களிப்பையும் ஆய்வு நிறுவனம் பெற்றுக்கொண்டுள்ளது. அத்துடன் உதவிக் கல்விப்பணிப்பாளரின் வழிநடத்துதலின் கீழ், குடாநாட்டில் சுமார் அறுபது பாடசாலையின் மாணவர்களதும், ஆசிரியர்களதும் ஒத்துழைப்பையும் பெற்றுள்ளது.

எதிர்வரும் நவம்பர் 4 ம் திகதி முதல் 30 ம் திகதி வரையிலான காலப்பகுதியை மரம் நடுகைக்காலமாக செயற்படுத்துவதற்கும் தமிழீழ ஆய்வு நிறுவனம் ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளது.

## தனியார் துறையினருக்கும்

## 41-ம் நாள் நினைவஞ்சலி



லெப். தம்பி

(தேவராசா - கண்ணன்)

(மணலாறு நேரடி மோதலில் வீரமரணம்)

வீரஜனனம் 17.01.1971 — வீரமரணம் 19.09.1991

தம்பி நீ சாய்ந்தாலும்
தலை சாய்க்கவில்லையடா!
ஏனெனில் நீ
தம்பியின் தலைமையில் நடந்தவனல்லவோ!

ஜி. பி. எஸ். றோட், கன்னியங்காடு — (R/1880) — உற்றார், உறவினர், நண்பர்கள்.

## ஈராண்டு அஞ்சலி



## சிறிலங்கா சுதந்திரக்கட்சி இரண்டாகப் பிளவுபடும்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாகப் பிளவுபடக்கூடிய ஒரு நிலை உருவாகி வருகின்றது என்று இக்கட்சி வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

அநுரா பண்டாரநாயக்காவுடனான தகராறு காரணமாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அவருடைய ஆதரவாளர்களுடன் சேர்ந்து சுயேச்சையாக இயங்கப் போவதாகவும்;

இவரோடு இவரது மகள் திருமதி. சந்திரிக்கா குமாரணதுங்காவும், கட்சியைச் சேர்ந்த ஆதரவாளர்கள் சிலரும் சேர்ந்து சுயேச்சைக் குழுவாக பாராளுமன்றத்திலும், வெளியிலும் செயற்படுவது என்றும் தீர்மானித்துள்ளனர் என்றும் அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். ஸ்ரீதர் திரையரங்கில்

## மாங்குளம் தகர்ப்பு

[விவரணப்படம்]

## இனியொரு விதி

[குறும்படம்]

ஆகியன அரங்கம் நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றன.

தினசரி ஒரு காட்சியும் (4 மணிக்கும்) சனி, ஞாயிறுகளில் இரண்டு காட்சிகளும் (4, 6 மணிக்கும்) காண்பிக்கப்படும்.

(B/3203)

## நினைவு கூருகின்றோம்...

1991 - 10 - 29

1985 ஆம் ஆண்டு இத்தினத்தில் சிறிலங்காப் படையினரின் எறிகணைத் தாக்குதலினால் கொல்லப்பட்ட தொண்டமானாற்றைச் சேர்ந்த தமிழ் இளைஞர்

1987 ஆம் ஆண்டு உரும்பராயில் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட இரு தமிழர்

1989 ஆம் ஆண்டு சுண்டிக்குளம் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய

காண்டீபன் (இராசலிங்கம் சிவபாலசுப்பிரமணியம் - சாவகச்சேரி)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/3396)

## நினைவு கூருகிறோம்

பிறப்பு 29 - 10 - 1967



வீர மரணம் 16 - 06 - 1990

பிறப்பு 24 - 04



கொண்டுள்ளது.

## தனியார் துறையினருக்கும் நிவாரணம்

(கொழும்பு)

1980 ஆம் ஆண்டில் இடம் பெற்றபொதுவேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டமையால் பாதிக்கப்பட்ட தனியார் துறை ஊழியர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டுமென தனியார் துறை தொழிலமைப்புகளை அரசாங்கம் கேட்டுக் கொண்டிருப்பதாக சிறிலங்காப் பிரதமர் டி.பி விஜயதுங்க கடந்த வெள்ளியாராளுமன்றத்தில் கூறியுள்ளார்.

---

கலை / வர்த்தகம் / முகாமைத்துவம் / இராமநாதன் நுண் கலைப் பிரிவு

**கல்வி ஆண்டு 1990/91**

மேற்படி பயிற்சி நெறிகளிலுள்ள 1ம், 2ம், 3ம், 4ம், வருட மாணவர்களுக்கான புதிய கல்வி ஆண்டு 04-11-91 ஆரம்பமாகும்.

பதிவாளர்

பரீட்சைக் கிளை,
யாழ். பல்கலைக்கழகம்,
25-10-91.

(B/3391)

---



தாய் மடியில் 14-05-1974

இறை மடியில் 20-10-1989

## செல்வி கலாரேகா கதிர்காமத்தம்பி

2 வது திதி நாள்: 29-10-1991

மகளே! உன்பிரிவு மண்ணில் ராண்டை
நகர்த்தி விரைவாய் நகர்ந்ததே கண்ணே!
உன்னிற் கண்டோம் ஓராயிரம் கனவுகள்
இன்னும் அவையே எம்மைச் சுற்றிடப்
புண்ணியப் பேறில் நீ, போன நாள் முதலாய்
கண்ணில் நீரோடக் கனவுகள் கலைந்ததம்மா!
பண்டு நீ செய்த பெருந்தவப் பேறால்
மண்ணக வாழ்வை மாலையில் முடித்து
விண்ணக் கூத்தன் விரிகதிர்ச் சுடரில்
எண்ணிலாக் கோடி ஒளிக்கதிரி லொன்றானாய்!
வருந்தவில்லை வாடவில்லை! வாழ்த்தியுனை,
வருவிருந் தெனவழியில் விழிபாய்ச்சுகிறோமம்மா!

ஆக்கம்: அநுஜீத்ரன்

குடும்பத்தினர்

'அன்னை இல்லம்'
குரும்பசிட்டி, தெல்லிப்பழை.

(R/ 1878)

---



| | | |
|---|---|---|
| - 1967 | - 1990 | 04 - 1970 |

**கப்டன் அன்சார்**
(கனகரத்தினம் சுரேந்திரன்)



| பிறப்பு | வீர மரணம் | இறப்பு |
|---|---|---|
| 25 - 11 - 1972 | 10 - 10 - 1990 | 29 - 10 - 1989 |

**வீரவேங்கை இந்திரன்**
(கனகரத்தினம் இந்திரவேல்)



**தேசபக்தர் ரவீந்திரன்**
(கனகரத்தினம் ரவீந்திரன்)

திதி: 29-10-1991

விடியலை வேண்டிடும் இனத்தின் குறை நீக்க
விரைந்துமே களத்தினில் வீறுடன் நின்றனர்
தீமைதரும் படையினை துரத்திட முனைந்தனர்
நெருப்பையே சுட்டிடும் நெருப்பாகி கொண்டனர்
தம்பியின் தலைமையை மகிழ்வுடன் ஏற்றனர்- தமிழ்
தரணியை மீட்டிட ஆயுதம் ஏந்தினர்
இறுதிவரை சமர் உறுதியோடு செய்த
தமிழினம் தலை நிமிர தம்முயிர் தந்தனர்
துரோகக்கும்பலின் துட்டத்தனத்தினால்
மடிந்தான் ஒரு தம்பி தேச பக்தனிவன்
வரலாறு இவர்களை வாரி எடுத்துக்கொண்டது
மனிதஇனம் உள்ளவரை மகத்தாக வாழ்வார்கள்

வியாங்கொடை
தெல்லிப்பளை கிழக்கு,
தெல்லிப்பளை

- குடும்பத்தினர்

(B/3395)

※ சிந்தனைக்கு ※

தன் சொந்த அனுபவத்தால் கற்பதைத் தவிர மனிதன் வேறு அறிவு பெறுவதில்லை.

— லைலேண்ட்

ஈழநாதம்

51, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 29-10-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2303
த.பெ.எண் 65

## இஸ்ரேலிடமிருந்தாவது கற்றுக் கொள்ளவும்

ஸ்பெயின் தலைநகரான மட்றிட்டில் நாளை (புதன்கிழமை) நடைபெறவிருக்கும் மேற்காசிய சமாதான மாநாட்டில் அரபுக்களுடன் உடன்பாடு காணுமாறு இஸ்ரேலிய அரசை வற்புறுத்தி முப்பதாயிரத்திற்கும் அதிகமான யூதர்கள் இஸ்ரேலின் தலைநகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மேற்குக்கரை காஸாப் பிரதேசம் ஆகிய ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை விட்டுக் கொடுத்து சமாதான உடன்பாட்டிற்கு வருமாறும் வற்புறுத்தியுள்ளனர்.

மட்றிட்டில் நடைபெறும் மத்திய கிழக்கு சமாதான மாநாட்டில் இஸ்ரேல் பிரதமர் கடும் போக்கைக் கடைப்பிடிக்கத் தீர்மானித்து மட்றிப் செல்லும் குழுவிற்கு தானே தலைமை தாங்கிச் செல்கையில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும்.

இஸ்ரேல் ஒரு நாடாக ஸ்தாபிக்கப்பட்டதில் இருந்து அந்நாடு எப்பொழுதும் இராணுவ மேலாதிக்க நிலையில் இருந்தே வந்துள்ளது. காலத்திற்குக் காலம் நடைபெற்ற போர்களில் பெருவெற்றி ஈட்டியதோடு, தமது இலக்குகளையும் நிறைவேற்றியே வந்துள்ளது. இஸ்ரேல் ஸ்தாபிக்கப்பட்ட பின்னரே ஜெருசலேம் காஸா, மேற்குக் கரைப்பகுதி என்பனவற்றை தன்னுடன் இணைத்துக் கொண்டது. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கோலான் குன்றுகளையும் வெற்றி கொண்டது. அதேவேளை, இஸ்ரேல் தனியாக பாலஸ்தீனத்தில் மட்டும் இராணுவ மேலாதிக்க நிலையில் இருக்கவில்லை. சூழவுள்ள அரபு நாடுகளை விடவும், ஏன் மத்திய கிழக்கிலேயே இராணுவ மேலாதிக்க நிலையிலேயே இருந்து வந்துள்ளது; இருந்தும் வருகின்றது.

மட்றிட் சமாதான மாநாடு அமெரிக்காவின் பெரு முயற்சியினால் நடைபெறுகின்றது. அதனைத் தட்டிக் கழிக்க முடியாது என்பதனால் தான் இஸ்ரேல் சமாதான மாநாட்டில் கலந்து கொள்ள தீர்மானித்துள்ளது என கருதுபவர்களும் உண்டு. ஆனால் இது [illegible]

# ருசியப் பேரரசு எப்படி வளர்ந்தது?

கூறுபட்டிருந்த ரஷ்யப் பிரதேசம், முதலாம் மகா யுத்தத்தின் பின் ஒன்று சேர்க்கப்பட்டு கம்யூனிசக் கொடியின் கீழ் ஐக்கிய சோசலிச சோவியத் குடியரசாக கொண்டுவரப்பட்டது. இரண்டாம் மகாயுத்தத்தின் போது ஐரோப்பாவில் கூடிய பிரதேசங்களையும், ஆசியாவில் சிறு சிறு பகுதிகளையும் தன் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டு ருசிய எல்லை மேலும் விரிவாக்கப்பட்டது.

ஒவ்வொரு சிறு சிறு குடியரசுகளும் ஒன்றுசேர்க்கப்பட்டு ருசியாவாக இருந்த நாடு பலம் பொருந்திய சோவியத் ஒன்றியமாக எப்படி மாறியது என்பதை கீழ்க்காணும் விளக்கங்களிலிருந்து காணக்கூடியதாக இருக்கிறது.

### ஆர்மீனியா (ARMENIA)

கி.மு. 07 ஆம் நூற்றாண்டிலிருந்து ஆர்மீனியர்கள் ஒரு தனிப்பட்ட இனமாக வாழ்ந்தமைக்கான வரலாற்றுக் குறிப்புகள் உள. பேர்சியர், றோமானியர், கிரேக்கர், அராபியர், துருக்கியர் இவர்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட ஆர்மீனியர்கள் ஒருகுறிப்பிட்ட காலத்திற்குத்தான் சுதந்திரமாக வாழ்ந்தனர்.

19ஆம் நூற்றாண்டில் ஒட்டமன் பேரரசின் எதிராக நடந்த யுத்தத்தில் ஆர்மீனியர்கள் ருசியர்களை ஆதரித்தார்கள். இவர்கள் சுதந்திரத்திற்காகப் போராடி குறுகிய காலத்திற்கே ஒரு தனிக் குடியரசைப் பெற்றனர். 1920 இல் ருசியாவும், துருக்கியும் ஆர்மீனியப் பிரதேசத்தைத் தமக்குள் பிரித்துக் கொண்டன. அதே வருடம் டிசம்பர் மாதத்தில் ஆர்மீனிய சோவியத் குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டது.

### அசர் பைஜான் (AZER BAIJAN)

அசர் பைஜான் கி.மு. இருந்த பேர்சியன் பேரரசின் ஒரு பகுதியாகும். துருக்கிய [illegible]

[illegible]ளோடு ஒத்திருந்தாலும், ஸ்கண்டிநேவியா, ருசிய ஆதிக்கத்தை 11ஆம், 12ஆம் நூற்றாண்டில் எதிர்த்தனர். ஆனால் 13 ஆம் நூற்றாண்டில் ஜேர்மன் பிரபுக்களுக்கு (Danishk - Knights) அடிமையாகிவிட்டார்கள். முதலாம் பீற்றரின் தலைமையில் வந்த ருசியப்படை 1709 இல் எஸ்தோனியாவை கைப்பற்றியது. 1940 ஆம் ஆண்டு ஹிட்லர் ஸ்ராலின் ஒப்பந்தத்தின் படி எஸ்தோனியா ஐக்கிய ருசியாவுடன் இணைக்கப்பட்டது ஒரு வருடத்திற்குப் பின் ஜேர்மன் குழுப்புக்கள் ருசியப் படையை அங்கிருந்து வெளியேற்றி எஸ்தோனியாவை தம்முடன் சேர்த்துக் கொண்டது. திரும்பவும் எஸ்தோனியாவை 1944 இல் ருசியப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

### ஜோர்ஜியா (GEORGIA)

காக்கேசஸ் (Caucasus) மலைப்பிரதேசத்தில் வாழ்ந்த ஜோர்ஜிய மக்களின்சரித்திரம் [illegible]

சோவியத் படைகள் லத்வியாவை கைப்பற்றி ஆகஸ்டில் ஐக்கிய சோவியத்துடன் இணைத்துக்கொண்டது.

### லித்துவேனியா (LITHUANIA)

லித்துவேனியர் லத்வியரைப் போல மேற்கு சிலாவிக் மக்களாவர். இவர்கள் பால்டிக் பகுதியின் தென்கிழக்குக் கரையோரங்களில் 2400 வருடங்களுக்கு முன்பே வாழ்ந்து வந்தனர். 1385இல் இந்த லித்துவேனியர் அண்டைநாடாகிய போலாந்து மக்களுடன் ஒன்று சேர்ந்து ஒரு பேரரசை உருவாக்கினார்கள். 18 ஆம் நூற்றாண்டில் ருசிய விரிவாக்கத்தால் லித்துவேனியா கைப்பற்றப்பட்டது.

1905 இல் நாட்டுப்பற்றுள்ள லித்துவேனியர் தனியாட்சி கோரினர். இந்த நாட்டைக் கைப்பற்றிய ஜேர்மனியர் தோல்வியடையும் நிலைக்கு வரும்போது, 1918 ல் சுதந்திர நாடாக அறிவித்தவர் [illegible]




[illegible]கோவியர் ருசியாவை கைப்பற்றிய பொழுது, துருக்கி மொங்கோலிய இனமக்கள் ஒன்று சேர்ந்து தென்மேற்கு சோவியத் ருசியாவில் கசாக் மக்களாகதிகழ்ந்தனர். 1731இல் இந்த இன மக்களின் தலைவர் சரணடைந்ததும் ருசியாவின் ஆட்சி கசாக் மக்கள் மேல் திணிக்கப்பட்டது. ருசியாவிலும், உக்ரேனிலும் உள்ள கமத்தொழிலாளரை கசாக்கில் குடியேற்றம் செய்த பொழுது அங்குள்ள மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் ஏற்பட்ட புரட்சி 1916இல் கொடூரமானமுறையில் அடக்கப்பட்டது.

கசாக் தேசியவாதிகள் 1917 இல் ஒரு அரசாங்கத்தை உண்டாக்கினார்கள். ஆனால் 1919 இல் செம்படை இப்பகுதிக்குள் புகுந்து ஒரு வருடத்தின் பின் தனி சுயாட்சி குடியரசாக அமைந்தது. 1936 இல் கசாக்ஸ்ரான் ஒரு முழு குடியரசாக மாறியது.

### கேர்கிசியா (KIRGHIZIA)

கூடுதலாக நாடோடிகளாகவுள்ள கேர்கிச மக்கள்மலைப் பிரதேச தென்கிழக்கு மத்திய பகுதிகளில் வாழ்கின்றனர். துருக்கி வழியினராக இவர்கள் சுதந்திரவாழ்க்கையை நடாத்தி வந்தனர். 19ம் நூற்றாண்டில் ருசிய குடியேற்ற வாசிகளால் கைப்பற்றப்பட்டனர். 1924 ல் கேர்கசியா ருசிய சமஷ்டி ஆட்சியில் ஒரு பகுதியாக்கப்பட்டது. இரண்டு வருடங்களுக்குப் பின் இது ஒரு தனி சுயாட்சிக் குடியரசாக மாறியது. பின்பு 1936 ல் முழுக்குடியரசு நாடாக உயர்த்தப்பட்டது.

### மொல்டேவியா (MOLDAVIA)

மொஸ்டேவியரவில் ஓர் பகுதி ஸ்லாவிக் நாகரிகத்தைக் கொண்ட கீவ் (kiev) ருசியர்கள் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்தார்கள். இப்பகுதி ரோமானிய அரசகுமாரர்களின் கீழ் 15ம் நூற்றாண்டில் [illegible]

முயற்சியினால் நடைபெறுகின்றது. அதனைத் தட்டிக் கழிக்க முடியாது என்பதனால் தான் இஸ்ரேல் சமாதான மாநாட்டில் கலந்து கொள்ள தீர்மானித்துள்ளது என கருதுபவர்களும் உண்டு. ஆனால், இது முற்றுமுழுதான ஏற்புடைய கருத்தல்ல. தொடர்ந்தும் போர்ச் சூழ்நிலையிலும், யுத்த அபாயத்திலும் இழப்புக்களுடனும் மக்கள் வாழ முடியாது என்பதன் வெளிப்பாடே இதுவாகும்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தில் இருந்து நாசிஸ்டுக்களின் இன்வெறிக்கு சற்றும் குறைந்ததல்ல சியோனிஸ்டுக்களின் (யூதர்களின்) இனவாதம். யூதர்கள் ஐரோப்பாவில் மிருகத்தனமாக அடக்கப்பட்டுக் கொல்லப்பட்டமையினாலும் அப்பொழுது அவர்கள் பால் சற்று அனுதாபம் இருப்பினும் இஸ்ரேல் அமைக்கப்பட்ட பின்னர் அவர்கள் பாலஸ்தீனியர்களுடன் நடந்து கொண்ட முறையும் அவர்களது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளும் உலகிலேயே பெரும் இனவாதிகள் என்ற நாமத்தை அவர்களுக்குப் பெற்றுக் கொடுத்தது. இதேவேளை அவர்களிடம் எந்த இனத்திடமும் இல்லாத அளவில் இருந்த இன ஐக்கியம் இந்தப் பெயரை அவர்கள் பெறக் காரணமாயிற்று.

அவ்வாறு இருந்தும் டெல் அவிவ்வில் நடந்த ஆர்ப்பாட்டம் மக்கள் பிரச்சினைகளைத் தீர்த்து நிம்மதியாகவே வாழ விரும்புகின்றார்கள் என்பதையே காட்டுகின்றது. ஆக்கிரமிப்பைக் கைவிட்டு அமைதியான சூழ்நிலையை உருவாக்க விரும்புகின்றார்கள். ஆனால், அரசியல்வாதிகள் அதற்குத் தயாராகவில்லை. சமாதான மாநாட்டிற்கு பிரதமர் இர்சாக்சமீர் தலைமையில் செல்லும் குழுவில் மிதவாதிகளுக்கு இடம் ஒதுக்கப்படவில்லை. இதனால், ஆளும் கட்சிக்குள் நெருக்கடிகள் எழுந்துள்ளபோதிலும், பிரதமர் தனது இனவாதத்தைக் கைவிடவில்லை.

இதேபோன்றே இன்று சிறிலங்காவிலும் நிலை உருவாகியுள்ளது. சிங்கள மக்கள் வடக்கு கிழக்கில் யுத்தம் தொடர்வதை விரும்பவில்லை தமிழர் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணவே விரும்புகின்றனர் என பல செய்தியாளர் தெரிவிக்கின்றனர். ஆனால், அரசியல்வாதிகள்தான் அதற்குத் தயாராக இல்லை. அவர்கள் நாட்டின் நலனோ, அன்றி மக்களின் நலனோ என்பதில் அக்கறையாக இல்லை. தமது நலன் ஒன்றிலேயே அக்கறையாகவுள்ளனர். ஒரு தசாப்தமாக பெரும் அழிவுகள் ஏற்பட்ட பின்னரும் திருந்துவதாக இல்லை.

இந்தநிலையானது சிறிலங்கா அரசியல்வாதிகள் தீர்வற்றவழியில் மக்களை இட்டுச் செல்வதாகவே முடிகிறது. இந்தநிலை மாற வேண்டுமானால் இனவாத அரசியல்வாதிகளை மக்கள் தூக்கி எறிய வேண்டும். அப்பொழுதுதான் அமைதியும் சமாதானமும் நாட்டில் நிலவும். இல்லையேல், கிழக்கை என்ன வடக்கையே சிறிலங்கா இராணுவம் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வரினும் அமைதியும் சமாதானமும் எட்ட முடியாத ஒன்றாகவே இருக்கும்.

(AZER BAIJAN)

அசர் பைஜான் கி.மு. இருந்த பேர்சியன் பேரரசின் ஒரு பகுதியாகும். துருக்கிய மக்கள் கூடுதலாக குடியேறிய வடபகுதியும், வருங்கால எண்ணெய் தலைநகரமான பக்கூவும் (Baku) 19 ஆம் நூற்றாண்டின் உடன்படிக்கையின் படி இணைத்துக் கொள்ளப்பட்டது. 1918 இல் துருக்கிய ஆட்சியின் கீழ் அசர் பைஜான் (Azer Baijan) குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனால் 1920 இல் செம்படையினால் ஆக்கிரமிக்கப்பட்டு சோவியத் குடியரசுடன் சேர்க்கப்பட்டது.

## பைலோ - ரஷ்யா (BYELOW RUSSIA)

ஆரம்பத்திலிருந்த கிழக்கு சிலாவிக் மக்களோடு (Slavic) வெள்ளை ருஷியர்களும் வாழ்ந்தனர். இவர்களே சேர்ந்து மற்றைய ருசியர்களும், உக்கிறேனியர்களும் (Ukrainians) ஒரு ருசிய மாநில அரசாங்கத்தை, கீவ் (Kiev) என்ற பகுதியில் 9 ஆம் நூற்றாண்டில் உருவாக்கினார்கள். மொங்கோலியர்களின் படையெடுப்பின் பின் பைலோ - ருஷியா பிரதேசம் போலிஷ் - லித்தானியர் (Polish - Lithunian) அரசர்களின் கீழ் கொண்டுவரப்பட்டது.

போலந்துக்கும் புதிய சோவியத் அரசாங்கத்திற்கும் நடந்த முதலாம் உலக போரின் பின், மேற்கு பைலோ ருசியாவின் ஒரு பகுதி போலாந்துடன் சேர்க்கப்பட்டது. இது செப்டம்பர் 1939 ஆம் ஆண்டு ஹிட்லர் - ஸ்ராலின் ஒப்பந்தத்தின் கீழ், திரும்பவும் ஐக்கிய சோவியத்துடன் சேர்க்கப்பட்டது.

## எஸ்தோனியா (ESTONIA)

எஸ்தோனியர் மொழியளவில் பின்ஸ் (Finns) மக்க



இற்றைக்கு 2800 வருடங்களுக்கு முன்பிருந்தே ஆரம்பமாகிறது. 13-ம் நூற்றாண்டில் இருந்த ஜோர்ஜிய பேரரசை மொங்கோலியப் படைகள் நசுக்கிவிட்டார்கள். பின்பு துருக்கி, பேர்சியன் ஆதிக்கத்தின் கீழ் வீழ்ந்துவிட்டது.

19-ம் நூற்றாண்டில் ருசியா, ஜோர்ஜியாவின் கூடிய பகுதிகளை இணைத்துக் கொண்டது. 1918-ல் ஜோர்ஜியா தன்னை சுதந்திர நாடாக அறிவித்த போது, அதை நேச நாடுகள் அங்கீகரித்தன. ஆனால் 1921-ல் செம்படைகள் திபிலிசிக்குள் (Tblise) புகுந்தது. ஸ்ராலினின் (இவரும் ஒரு ஜோர்ஜியர்) தலைமையின் கீழ் ஒரு சோவியத் குடியரசாக சேர்க்கப்பட்டது.

## லத்வியா (LATVIA)

இன்றைய லத்வியமக்களின் மூதாதையர்கள் 9-ம் நூற்றாண்டிலிருந்தே வாழ்ந்து வந்த மேற்கு சிலாவிக் மக்களாவர். ரியுரோனிக் பிரபுகள் (Teutonic Knights) லத்வியா பிரதேசத்தை 13-ம் நூற்றாண்டில் தம்வசப்படுத்தி அங்கு 100 வருடம் ஆட்சி புரிந்தனர். பின்பு போலாந்தும், சுவீடனும் ஆட்சி புரிந்தன. முதலாம் உலகப் போரின்பின் ஜேர்மன் படையினரும், ருசியாவின் பீற்றோகிறேடில் இருந்த (Petrograd) கிளர்ச்சியாளர்களும் பால்டிக் (Baltic) நாடுகளைத் தங்கள் வசப்படுத்த போட்டியில் இறங்கினர். ஜேர்மனி வீழ்ச்சி அடைந்ததும் லத்வியர் 1920ல் சுதந்திரப்பிரகடனம் செய்து ஒரு குடியரசை அமைத்தனர்.

ஜூன் 1640-ல் ஹிட்லர்-ஸ்ராலின் ஒப்பந்தத்தின் கீழ்

பின்பு போலந்துடன் ஏற்பட்ட பிரச்சினையில் லித்துவேனிய தலைநகரமாகிய வில்நியஸ் (VILNIUS) போலந்துடன் இணைக்கப்பட்டது. 1939 ல் சோவியத்படைகள் இந்த நகரத்தைக் கைப்பற்றி லித்துவேனியர் வசம் திருப்பிக் கொடுத்தது. ஆனால் ஒரு வருடத்தின் பின் ருசியா முழுநாட்டையும் (லித்துவேனியாவை) தன்னுடன் இணைத்துக்கொண்டது.

## கசாக்ஸ்ரன் KAZAKHSTAN

15ம் நூற்றாண்டில் மொங்

கள் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்தார்கள். இப்பகுதி ரோமானிய அரசகுமாரர்களின் கீழ் 15ம் நூற்றாண்டில் இருந்தது. திரும்பவும் 19-ம் நூற்றாண்டில் ருசியர்களின் கீழ் கொண்டு வரப்பட்டது. இதன் மேற்குப் பகுதியாகிய பெஸ் அரேபியா (Bess Arabia) றொமேனியாவிற்கு 1918-ல் கொடுக்கப்பட்டது.

ஆகஸ்ட் 1940 ல் ஹிட்லர்-ஸ்ராலின் ஒப்பந்தத்தின் படி பெஸ் அரேபியாவை மொஸ்கோ இணைத்துக் கொண்டு அதை மொல்டேவியன் குடியரசுடன் சேர்த்துவிட்டது.

(தொடரும்)

# இலக்கிய ஆராய்ச்சிக்கு நூல் அனுப்ப கோரிக்கை

(சென்னை)

புதுவையில் நடைபெறும் கவிதை இலக்கிய ஆராய்ச்சிக்கு இலங்கையில் வெளியிடப்பட்ட நூல்களை அனுப்ப கோரிக்கை விடப்பட்டுள்ளது.

புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தாலேயே இந்தக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்துள்ள மரபுக்கவிதைகளையும், மற்றும் புதுக்கவிதைகளையும் தொகுத்து உள்ளடக்க, வடிவ அடிப்படையில் இக்காலக் கவிதை இலக்கியக் கோட்பாட்டினை உருவாக்க புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் ஓர் ஆய்வுத் திட்டத்தினை மேற்கொண்டுள்ளது.

இந்த ஆய்வுத் திட்டத்தில் தமிழ்நாடு, புதுச்சேரி, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த கவிதைகளும் இடம் பெறவுள்ளன.

இதனால் இலங்கைப் பதிப்பகங்களில் வெளியாகிய அல்லது கிடைக்கும் இலங்கை கவிதைத் தொகுப்பு நூல்கள் ஒவ்வொன்றிலும் இரண்டினை புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்குமாறு இந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் கோரிக்கைவிடுத்துள்ளார்.

# கிணற்றில் விழுந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கணேஸ் (வயது 36) என்பவர் நேற்று முன்தினமிரவு 8-00 மணியளவில் கிணற்றில் தவறி விழுந்து மரணமானார்.

# பட்டினியை தடுக்கவே நடவடிக்கை; பறிமுதல் செய்வதற்காக அல்ல

## -வர்த்தகர்கள் மத்தியில் பரா

எமது தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடங்கி 15 வருடங்களுக்கு மேலாக இப் போராட்டத்திற்கு ஏற்பட்ட செலவின் பெரும்பங்கை தந்துதவியவர்கள் வர்த்தகர்களாகிய நீங்கள்தான் என்பதை நாம் மறக்கவில்லை. எமது போராட்டம் வளர்ச்சியடைவதற்கு இனிமேலும் உதவி செய்யவேண்டியவர்கள் நீங்கள்தான். இன்று எமது மக்களை பட்டினிபோட அரசாங்கம் திட்டமிட்டு உணவுப் பொருட்களை இங்கு அனுப்பாது தடைசெய்கின்றது. இதன் காரணமாக எம்மக்கள் பட்டினிச்சாவைக்கூட எதிர்நோக்கலாம். இதைத் தடுக்கும் முகமாகவும் எம்மிடம் இருக்கின்ற உணவுப் பொருள்களை நீண்ட காலத்திற்கு அரசு என்ன தடை விதித்தாலும் மக்களுக்கு ஒழுங்கான முறையில் சமமாக விநியோகித்து எல்லோருக்கும் உணவு கிடைக்கச் செய்யவே சில உணவுப் பொருள்கள் அத்தியாவசியப் பொருள்களாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு தமிழீழ மக்கள் உறவு, கொள்கை முன்னெடுப்புப் பிரிவின் பொறுப்பாளர் பரா தெரிவித்தார். யாழ். மாவட்ட வர்த்தகர்களுக்காக யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு பேசிய திரு. பரா மேலும்,

இன்று கட்டுப்பாட்டு விலையில் எல்லா கஷ்டமடைந்த மக்களும் ஓரளவு உணவுப் பொருள்களைப் பெறக்கூடிய வகையில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. தனியார் விற்பனையாளர்களாகிய உங்களிடம் இவ் அத்தியாவசியப் பொருள்களை விற்கவேண்டாம் என்று நாம் கூறியது உங்களுடைய பொருள்களை நாம் பறிமுதல் செய்வதற்கல்ல. பதுக்கலை கட்டுப்படுத்துவதற்கும், அன்றாடம் வேலையற்றிருக்கும் மக்களு

ருள்களை அனுப்பாது விடலாம். இங்கே இருக்கின்ற உணவு வகைகளை தமிழ் மக்களாகிய எல்லோரும் ஒரு தாய்ப்பிள்ளை போல பகிர்ந்து உண்ண வேண்டும். மக்களுக்காக அவர்களின் விடிவுக்காக போராடப்புறப்பட்ட நாம் பட்டினியால் அவர்கள் சாக நேரிடும்போது அதை அனுமதிக்க முடியாது. எம்மிடம் உள்ள உணவையும் பசியால் வாடும் மக்களுக்கு கொடுக்க தயங்கமாட்டோம். இன்றைய நெருக்கடி நிலையில் ஒருவர் உணவை சாப்பிட்டுக்கொண்டு ஒருவர் சாப்பிடாமல் இருக்க நாம் வழிவகை செய்யக்கூடாது என்பதற்காகவே இவ் அத்தியாவசியப்பொருள்களை பொது விநியோகம் என்ற அடிப்படையில் கூட்டுறவுச் சங்கங்களுக்கூடாக நாம் விநியோகிக்கின்றோம். அடுத்து நாம் வரி அறவிடுவதைப் பற்றியும், மண் மீட்புநிதி பெறுவது பற்றியும் உங்களின் சிலருக்கு தாக்கங்கள், சந்தேகங்கள் இருக்கலாம். இந்த போராட்டத்தின் உண்மை நிலையை நீங்கள் உணரவேண்டும். இப் போராட்டத்திற்கு ஒருமாதம் போராளிகளை சமாளிப்பதற்கு சாதாரணமாக 8 கோடி ரூபா செலவாகிறது. இதில் ஒரு பகுதியைத்தான் உங்களிடமிருந்து பெறுகிறோம்.

2 லட்சத்து 30 ஆயிரம் வரையிலான குடும்பங்கள் யாழ். மாவட்டத்தில் வாழ்கிறார்கள், இவர்களில் 1 லட்சம் பேரிடமே பவுண் வாங்க தீர்மானித்துள்ளோம்; அதில் 65 ஆயிரம் பேரிடமே இதுவரை பவுண் வாங்கியுள்ளோம். 1 லட்சம் பேரும் பவுண் தந்தால் அதை நாம் ஒரு மூலதனமாக வைத்து எம்மக்கள் மீது அதிக பளுவை சுமத்தமாட்டோம், அதுமட்டுமல்ல வாங்கப்படுகின்ற பவுண் திருப்பி கட்டாயம் அளிப்போம்.

இவ்வளவு கஷ்டங்கள் மத்தியிலும் எங்களுடன் சேர்ந்து வாழ்கின்ற மக்களில் நீங்களும் ஒரு பகுதியினர்தான். இப் போராட்டத்தில் பங்காளிகளாகவும் நீங்களும் இருக்கின்றீர்கள். இருந்தும் இங்கே வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களும் தமிழ் மக்கள்தான் அவர்களுக்கு வேண்டிய பொருள்களை பதுக்காது உயிர் வாழ்வதற்கு உங்களிடம் இருக்கும் பொருள்களை கொடுத்து உதவ வேண்டும். இம் மக்களின் நலனுக்காக நீங்களும் சில கஷ்டங்களை அனுபவித்தாலும் உதவி செய்வீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

இக்கலந்துரையாடலில் தமிழீழ நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி, யாழ். மாவட்ட மக்களுறவு கொள்கை முன்னெடுப்பு பிரிவு பொறுப்பாளர் இளம்பரிதி (ஆஞ்சநேயர்) ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

## சீரான விநியோகத்திற்கு ஒத்துழைப்புத் தரவும்

### - அரச அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையால் யாழ்.மாவட்ட திடீரான தரைமார்க்கமான உணவுப்பொருள் விநியோகம் [illegible] உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை உருவாகி வருவதாக யாழ். அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

## 40 கோடிரூபா நிதி உதவி

(கொழும்பு)

குறைந்த வருமானம் பெறும் குழுவினர் மத்தியில் வீடில்லாப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு என ஆசிய அபிவிருத்தி வங்கி 40 கோடி ரூபாவினைசிறிலங்கா அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளது.

இவ் விதிமுறைசார அடிப்படையில் வீடமைப்பு கடன்களை வழங்குவதற்கு வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் இந்தப் பணத்தை விநியோகிக்கும் என்று சிறிலங்காவின் வீடமைப்பு அமைச்சர் சிறிசேனகூரே தெரிவித்துள்ளார்.

## நொச்சிமோட்டை பாதை மக்கள் பாவனைக்கு?

(கொழும்பு)

கடந்த ஒருவருடத்திற்கு மேலாக போக்குவரத்து செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்த வவுனியா - நொச்சிமோட்டை நேர்ப்பாதையூடாக மக்கள் பயணம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

'ஒப்பரேசன் வலம்புரி' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து வடக்கிலிருந்து புறப்பட்டு வவுனியாவை வந்தடைய முடியாமல் நொச்சிமோட்டைக்கு அப்பால் பல நாட்கள் காத்துக் கிடந்த பெருந்தொகையான பயணிகள் நேற்று முன்தினம் வவுனியாவை சென்றடைந்தனர் எனவும் கூறப்படுகிறது.

## இத்தாலியில் இலங்கையர்மீது விசாரணை

இத்தாலியில் இலங்கையை சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்களும், யுவதிகளும் அந்நாட்டுப் பொலிசாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

போதைவஸ்துத் தொடர்பாகவே இவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் கொழும்புக்குத் தெரிவிக்கப்பட்ட செய்திகள் தெரிவிக்கின்றன.

## இராணுவ நடவடிக்கையால் நெற்செய்கை பாதிப்பு

(சுச்சமோட்டை)

பூநகரியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையால் பெரும்போக நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

வாடியடி, செட்டியகுறிச்சி, ஞானிமடம், கறுக்காய்தீவு, செல்லையாதீவு, அத்தாய், தம்பிராய், ஆலங்கேணி போன்ற பகுதிகளில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்திருப்பதால் இப்பகுதிகளில் கால்நடைகள் நெற்பயிர்களை மேய்ந்து அழித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (43)

## மலையக பாடசாலைகளுக்கு இந்தியாவிலிருந்து ஆசிரியர்

''மலையகத் தமிழர்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு மூன்றுவருடஒப்பந்த அடிப்படையில் மலையகத் தோட்டப் பாடசாலைகளுக்கு 300 கணித, விஞ்ஞான ஆசிரியர்களை இந்தியாவிலிருந்து அழைப்பிக்க நடவடிக்கை எடுத்து வருகிறேன்''

இவ்வாறு இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், உல்லாசப் பயணத்துறை அமைச்சருமாகிய எஸ் தொண்டமான் பத்தனையில் இடம் பெற்ற பரிசளிப்பு விழா ஒன்றில் கலந்துகொண்டு பேசும்போது தெரிவித்தார்.

## மோட்டார் சைக்கிள் மோதி மாணவி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

தனியார் கல்வி நிலையத்தில் கல்வி கற்றுவிட்டு வீடு திரும்பிய மாணவி மீதுமோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் படுகாயங்களுக்குள்ளானார்.

நேற்றுமாலை திருநெல்வேலிச் சந்தியில் இடம்பெற்ற இவ் விபத்தில் கொண்டாவிலைச் சேர்ந்த பேரம்பலம் திருமகள் (13) என்ற மாணவியே காயமடைந்தவர்.

இவர் தற்போது உடனடி சிகிச்சைக்காக யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (நி)

கிழக்கில்

தல்களில் இடம் பெற்றன இதேவேளை கடந்த நான்கு

## வைரஸ் நோயினால் கால்நடைகள் இறக்கின்றன

(சுச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் கால்நடைகள் இறப்பது தற்போது அதிகரித்து வருவதாகவும் பல கால்நடைகள் ஒருவித வைரஸ் நோயினால் பீடிக்கப்பட்டு சமியாக்குறைபாட்டால் இறக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக கால்நடை

மண்முனைத்துறை

உங்களுடைய பொருள்களை நாம் பறிமுதல் செய்வதற் கல்ல. பதுக்கலை கட்டுப்படுத்துவதற்கும், அன்றாடம் வேலையற்றிருக்கும் மக்களுக்கு முடிந்தளவு உணவுப்பொருள்களை பெறக்கூடிய வழி செய்வதற்குமேயாகும்.

அரசாங்கம் நீண்ட காலத்திற்கு எமக்கு உணவுப் பொ

(...)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையால் யாழ்.மாவட்டத்திற்கான தரைமார்க்கமான உணவுப்பொருள் விநியோகம் தடைப்பட்டதாலும், கப்பல் மூலம் உணவுப் பொருள்கள் எடுத்துவருவதில் ஏற்பட்டு வரும் தாமதத்தினாலும் இம் மாவட்டத்தில் அத்தியாவசிய

டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை உருவாகி வருவதாக யாழ்.அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

இச் சூழ் நிலையில் மாவட்டத்தில் கையிருப்பில் உள்ள உணவுப் பொருள்களை கட்டுப்பாடான முறையில் அனைத்து மக்களின் தேவைகளுக்காகவும் பகிர்ந்து விநியோகிக்க வேண்டிய தேவை தவிர்க்கமுடியாமல் ஏற்பட்டிருக்கின்றது.

மேற்படி விநியோகத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் சீரக்குவதற்கும் மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் கிராமிய, பிரதேச ரீதியான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அடிப்படையில் உணவுப் பொருள்களின் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

இச் சூழ்நிலையில் பொது மக்களும் வர்த்தகர்களும் மேற்படி முறையில் விநியோகிப்பதற்கு பூரண ஒத்துழைப்புத் தரும்படியும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க)

# மரண அறிவித்தல்

## திருமதி
## கண்ணையா மனோன்மணி

புங்குடுதீவு இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி கண்ணையா மனோன்மணி (28-10-91) காலமானார். அன்னார் காலஞ்சென்ற பிரபலவர்த்தகர் திரு. அ. கண்ணையா அவர்களின் அருமை மனைவியும், காலஞ்சென்ற கிருபாநந்தன், திரு. கிருபாராசன் திரு. கிருபாநிதி, கிருபாமணி, கிருபாராணி, கிருபாமலர் கிருபாநந்தினி, கிருபாரஞ்சினி கிருபாரமணி ஆகியோரின் அருமைத் தாயாரும், திரு. வே. வைத்திலிங்கம் (தொழில் நுட்ப அதிகாரி) திரு. சி. புலேந்திரன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர் வேலணைக் கல்விக்கோட்டம்) காலஞ்சென்ற திரு ஆ. சண்முகலிங்கம், திரு ச. வல்லவசீலன், (ஜேர்மனி) திரு. இ. இரத்தினரூபன் (ஜேர்மனி, திரு. ச. சத்தியபாலன் (கனடா). திருமதி. கி. சுதந்திரா தேவி, திருமதி. கி. மல்லிகாதேவி, காலஞ்சென்ற திருமதி கி. சிவகுமாரி ஆகியோரின் அருமை மாமியும், காலஞ்சென்ற திரு. த. பாலச்சந்திரன், திருமதி கி. மரகதம், திருமதி, கா. மகேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரியும், திரு. க. கு. கிருஷ்ணபிள்ளை, திரு. மு. கார்த்திகேசு, திருமதி. பா. அருளம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (29-10-91) இன்று பிற்பகல் 2-00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்,

23, பிரம்படி வீதி,
கொக்குவில்.

சி. புலேந்திரன்
(மருமகன்)

(R/1881)

**பேசாலையில்**

தாக்குதல் நடத்தியுள்ளனர். இத்தாக்குதல் பற்றி செய்தி வெளியிட்ட கொழும்பு பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் சேத விபரங்கள் எதனையும் அறிவிக்கவில்லை.

**வெலிகந்த**

- ★ ஐ.எம். ரவை -35 13
- ★ ஏ கே.எல் எம்.ஜி லின் - 550
- ★ ஜே ஆர் கைக்குண்டுகள் - 03
- ★ 60 அங்குல மோட்டார் ஷெல் - 06
- ★ 60 அங்குல பூண்டர் பெட்டி - 01

**எங்கிருந்தாலும்**

சும் தமிழீழ அரசும் தங்களால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற் கொள்ளும் என்றும், இந்தச் சொனைக்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப் படுவர் என்றும் தெரிவித்தார்.

**கிழக்கில்**

தல்கள் இடம் பெற்றன. இதேவேளை கடந்த நான்கு நாள்களுக்கு இடையில் நடந்த மண்டூர், வெலிகந்த தாக்குதலில் மட்டும் 21க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அதற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பல நவீன ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

கிழக்கில் புலிகளின் தாக்குதல்கள் அதிகரிக்கத் தொடங்கியதை அடுத்து சிறிலங்கா இராணுவத் தலைமைக்கு நெருக்கடிகள் அதிகரித்துள்ளன. கடந்த சில மாதங்களாக வடக்கில் தனது முழுக் கவனத்தையும் செலுத்திவரும் சிறிலங்கா இராணுவத் தலைமைப்பீடம் கிழக்கில் தற்போது முதுநிலையும் அதிரடித் தாக்குதலினால் கவலையும் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து குழப்பமும் அடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது. புலிகளின் இத்தாக்குதல் நடவடிக்கைகள் பெரும் தலைவலியை சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்படுத்தியுள்ளதாக பி.பி.ஸி நேற்றிரவு அறிவித்தது.

**வீரமரண**

கொண்ட முதலாவது பெண் போராளி நிலா என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்குப் பிராந்தியத்தில் அனித்தா முதலில் வீரமரணமடைந்தாலும் அவரின் போராட்ட நடவடிக்கைகள் வித்தியாசமானது அவர் கூடுதலாக இராணுவ இரகசிய நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டு வந்தார். இத் தாக்குதலில் புலிகள் தரப்பில் ஓய்வெப்டினன்ட் நிலாமட்டுமே வீரமரணமடைந்ததும் குறிப்பிடத்தக்கது

தென் தமிழீழ சமூக அமைப்பின் பெண்கள் எழுச்சி கொண்டு வருவதனையே இத் தாக்குதலின் வெற்றி உணர்த்துவதாகவுள்ளது.

நடைகள் இறப்பது தற்போது அதிகரித்து வருவதாகவும் பல

**மண்முனைத்துறை**

துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

நேற்று முந்தினம் காலை 10-30 மணிக்கு ஆரையம்பதி இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினரே மண்முனைத் துறைக் காட்டுப் பகுதியை நோக்கி தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகவும் இத்தாக்குதல் முப்பது நிமிடங்கள் வரை நீடித்ததாகவும் தெரியவருகிறது.

**புலிகளுக்கு**

தெரிவித்தார்.

இதேவேளை அம்பாறை மாவட்டக் காட்டுப்பகுதியில் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் கடுமையான விமானத்தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

சமியாக்குறைபாட்டால் இறக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக கால்நடை வைத்திய நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

இந்நோய் வராமல் தடுப்பதற்கு தடுப்பூசி மருந்துகள் என்பன கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வராமையினால் கால்நடைகளுக்கான நோய்த்தடுப்பூசி மருந்தின்மையினால் பல கால்நடைகள் இறக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (43)

**அஞ்சல்**

படுத்தப் பட்டமையாலேயே அடையாள அட்டைகள் வழங்கப்படாமல் தபால் நிலையத்தில் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# தமிழீழ காவல் துறை

## ஆண் / பெண் காவலர்களுக்கான வெற்றிடங்கள்

**வயதெல்லை 18-30 வருடங்கள்**

கல்வித்தகைமை : க. பொ. த. (சா. த) தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

உயரம் : 5' 6''

விண்ணப்பங்கள் சொந்தக்கையெழுத்தில் எழுதப்பட்டு நேரில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 02-11-91**

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
தமிழீழ காவல் துறை செயலகம்
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

பொறுப்பாளர், தமிழீழ காவல் துறை

(B/3401)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.